Allowance to their employees on the scales prescribed therein with effect from 1s November 1967. They also sanctioned the payment of the Madras City Compensatory Allowance at the rates fixed therein to the Government servants with effect from the same date. The Madras State Electricity Board agreed in principle to the grant of similar relief to its employees but its problem was whether the payment should be termed as Dearness Allowance and City Compensatory Allowance or whether it should be in the shape of an ad hoc payment having regard to the possibility of adjusting it later. This question arose because of the impending recommendation of the Central Wage Board for Electricity Undertakings regarding grant of interim relief to the workers, and the need for adjusting the present payment in the event of the Wage Board recommending an ad hoc payment based on certain principles. The Madras State Electricity Board had initial consultations on this issue with the Tamil Nad Electricity Workers Federation, Accounts Subordinates Union and Last Grade Servants Union. A flat rate interim relief was first proposed. Later, after consultation with the Government the Board has decided that the increase in Dearness Allowance on the scales given by the Government may be given as 'interim relief' to all regular employees of the Board eligible for it and that the City Compensatory Allowance termed as 'Madras City Compensatory Allowance' may ge granted to the employees in the Madras City only subject to the condition that the interim relief and City Compensatory Allowance to be paid now is in lieu of any interim relief to be recommended by the Central Wage Board and accepted by the Government of India and that the existing emoluments and payments made under this settlement will be adjusted in the total emoluments that may be decided by the Madras State Electricity Board after the Government of India pass orders on the final recommendations of the Central Wage Board. The payments will take retrospective effect as in the case of Government servants. This decision has been taken after consultation with the Tamilnad Electricity Workers Federation, Accounts Subordinates Union and Last Grade Servants Union and an agreement to this effect was signed by the Board with the Unions on 22nd February 1968.

4. பேரவைத் தலைவரின் விளக்கம்.
பேரவை நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டிய மொழி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி விவாதம் தொடங்கும் முன்னால் ஒரு விளக்கத்தைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மொழி பற்றி பேரவையின் விதிகள் மூன்று பகுதிகளாக உள்ளன. ஒன்று, பேரவையின் நடவடிக்கைகள் ஆங்கிலம் அல்லது தமிழில்தான் இருக்கவேண்டும். இரண்டு, ஆனால் நடவடிக்கைகள் என்று கருதப்படாமலேயே இந்தியிலோ, தெலுங்கிலோ, மலையாளத்திலோ, கன்னடத்திலோ பேசலாம். மூன்று, இந்த மொழிகள்கூடத் தெரியாதவர்கள் தங்களுடைய தாய்மொழி, மலாய் மொழி, பர்மிய மொழி, ஃப்ரெஞ்ச் மொழி எதுவானாலும் அதில் பேசலாம். இவைகள்தான் இன்றைய விதிகளிலே இருக்கின்றன. இப்பொழுது இருக்கப்பட்ட நிலைமையைச் சொன்னேன். ஆனால் விதியை மாற்ற விரும்பினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது ஆளுகின்ற கட்சியோ விரும்பினால்—தெலுங்கிலும் பேரவையில் நடவடிக்கைகள் இருக்கலாம். என்று மாற்ற விரும்பில்,

1968 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

அதை விதிக் குழுவில் வைத்து, ஆராய்ந்து மாற்ற வேண்டும். இதற் கிடையில் பழைய விதியின்படியே பேரவையை நடத்த நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (தொடர்ந்து பேரவைத் தலைவர் தெலுங்கிலே பேசினார்.)

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசத் தொடங்கினார்.

5. நடைமுறைக் கேள்வி.

நூலகத்தில் பேரவை நடவடிக்கைக் குறிப்புச் சுவடு வைக்கப்படுதல்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று நடந்த சட்டசபை நிகழ்ச்சிகளிலே அன்றையதினம் எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு விநயகம் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை இருப்பதாகவும் அது உரிமைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டதாகவும் அன்றையதினம் தலைமை வகித்த தலைவர் அவர்கள் சொன்னார்கள். பிறகு, அதுபற்றிய விளக்கம் சொல்லு கின்ற நேரத்திலே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் "அனுப்ப வேண்டி நேரிடும்" என்றுதான் சொன்னார் என்று சொன்னார் கள். அப்பொழுது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆனால், இன்றையதினம் பத்திரிகையிலே அதுபற்றி வேறுவிதமாக எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்களின் மேல் உரிமைக் கமிட்டிக்கு அந்தப் பிரச்சினை சென்றிருப்பதாகப் பார்த்தோம். அதற்கான உரிய விளக்கத்தைப் பார்ப் பதற்காக, சபையின் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காக, அந்தக் குறிப்புகளை லைப்ரெரியில் சென்று பார்த்தேன். ஓராண்டு காலமாக சபைக் குறிப்புகள் அங்கே வைக்கப்படவில்லை என்று அங்கே குறிப்பிட்ட பிறகு, அது கிடைக் கின்ற இடமாகிய ரிப்போர்ட்டிங் செக்ஷனுக்குச் சென்று பார்த்தேன். அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்பு அங்கும் கிடைக்காத காரணத்தால் இன்றையதினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மீது பிரச்சினை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட முன்பு லைப்ரெரியிலே நடவடிக்கைக் குறிப்புக்களை வைக்கிறேன் என்று சொன்ன உறுதிமொழி என்ன ஆயிற்று என்று கேட்கிறேன். அதுபற்றி நேற்றே நீங்கள் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லாத நேரத்திலே அதுபற்றிய சபாநாயகர் அவர்களுடைய விளக்கத்தை எதிர் பார்க்கிறேன், கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்ன என்பதை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த நூலகத்திலே—லைப்ரெரியிலே— சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளை வைத்தால்தான் எல்லோரும் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஏற்கெனவே இதைப்பற்றி கேட்ட பொழுது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்புகளை லைப்ரெரியிலே வைப்பதாக பிஸினெஸ் அட்வைசரி கமிட்டியிலே வாக்குறுதி கொடுத்தார் கள். ஆனால் லைப்ரெரியிலே அந்த நடவடிக்கைகள் வைக்கப்படவில்லை. பாராளுமன்றத்திலே அந்த அந்த நாள் நடக்கும்படியான அன்றாடக் குறிப்புகளை வைத்தால்தான் அங்கத்தினர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று வைக்கப் படுகிறது. ஆகவே, இனிமேல் தயவுசெய்து இங்கும் வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் எங்களுடைய உரிமை கூட பாதிக்கப்படு கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, அன்றன்று நடவடிக்கைகள் நூலகத்திலே கண்டிப்பாக வைக்கவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமையைப் பாதிப்பதாக இருந் தால், பாயிண்டு ஆஃப் ஆர்டரில் கொண்டுவர முடியாது. 83-வது விதி யைப் பாருங்கள்.

A point of order should not be a point of privilege.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒழுங்குப் பிரச்னை என்ற அடிப்படையிலே கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே சொல்லியிருப்பது என்னவென்றால், திருத்தப்படாத குறிப்புகள் நூலகத்தில் வைக்கப்பட்டால் திருத்தப்படாதவைகளைப் பார்த்து, அதனால் பல கேள்விகள் வரக்கூடும். ஆகவே, திருத்திய பின் வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வைக்கப்படுவதில்லை. இதுவரையிலும் நூலகத்தில் வைக்கப்படுவதில்லை. அதற்கு என்ன சொல்கிறீர்கள். ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்னவென்று பார்க்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வைக்கிறதே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வைக்கிறதில்லை என்று சொன்னால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் நூலகத்திற்குச் சென்று பார்த்திருக்கிறேன். வைக்கப்படுவதில்லை, வைக்கப்படுவதில்லை, வைக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மூன்று தரம் வைக்கப்படுவதில்லை என்று சொன்னால், நான் நான்கு தரம் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தெலுங்கில் பேசினார்.

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தெலுங்கில் பேசினார்.

4. பேரவை நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டிய மொழி—**தொடர்ச்சி.**

THIRU. T. MARTIN : Sir, I want a clarification from the hon. Member. . . .

MR. SPEAKER : I have been saying in Tamil that what he says in Telugu is not part of the business of the House.

நான் தெலுங்கில் பேசியதைக் கூட பேரவையின் நடவடிக்கையில் போடக்கூடாது. அப்படி பேரவையின் நடவடிக்கையில் இல்லாததைப் பற்றி "க்ளாரிபிகேஷன்" என்ன கேட்க இருக்கிறது ? விதிகளை மாற்றுவது என்றாலும், தெலுங்கு முதலிய மொழிகளுக்கு அதிக உரிமை கொடுப்பதாக இருந்தாலும், மாண்புமிகு முதல் அமைச்சரோ அல்லது ஆளும் கட்சியினரோ அம்மாதிரி விரும்புவதானால், அவர்கள் அதுபற்றி விதிக் குழுவிற்கு திருத்தம் கொண்டுவந்து, நிறைவேற்றி, அதன் பிறகு இந்தப் பேரவையில் வைத்து பேரவை ஒப்புதல் அளிக்கவேண்டும். ஆனால், இப்பொழுது இருக்கும் நிலை விளக்கமாக இருக்கிறது. தெலுங்கிலோ, மலையாளத்திலோ அல்லது வேறு மொழிகளிலோ பேச விரும்புகிறவர்கள் பேசலாம். ஆனால் அதெல்லாம் பேரவையின் நடவடிக்கைகளில் வராது. நான் தெலுங்கில் பேசியது கூட வராது. அப்படி இருக்கும்போது, அதிலே "கிளாரிபிகேஷன்" கேட்கமுடியாது.

இப்பொழுது திரு. ம. கி.பொ அவர்கள் பேசுவார்கள்.

1968 மார்ச் 5]

திரு. டி. மார்டின் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் வேண்டு மானால் எழுப்புங்கள். வேறெதற்கும் இப்பொழுது இடமில்லை.

திரு. டி. மார்டின் : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். ஏற்கனவே ஹோசூர் தாலூகா மைசூர் மாநிலத்தோடு அல்லது ஆந்திர மாநிலத் தோடு இணைக்கப்படவேண்டும் என்று இருந்ததற்குக் காரணம், அங்கு பெரும்பான்மையானவர்கள் தெலுங்கு, கன்னடம் பேசுகிறார்கள் என்ப தால்தான். அப்படிப்பட்ட நிலைமையில், இப்பொழுது ஆங்கிலம் தெரிந்த ஆங்கிலத்தில் பேசக்கூடிய உறுப்பினர் இந்த சபையில் தெலுங்கிலே பேசு கிறார் என்றால், வேண்டுமென்றே அப்படிப் பேசுகின்றதின் நோக்கம், ஏற்கனவே இருந்த கருத்துக்கு ஊக்கம் கொடுக்கும் முறையிலே பேசு கிறார்களா என்பதை அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளை பலமுறை தெளிவாகச் சொல்லிவிட்டேன். என்னை சிலர் குறை கூறுகிறார்கள், நான் திரும்பத் திரும்ப விதிகளை எடுத்துச் சொல்லுகிறேன் என்று. இருந்தாலும் மீண் டும் சொல்கிறேன். உறுப்பினர் எவரும் தன் விருப்பப்படி இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய எந்த மொழியிலும் பேச இடம் இருக்கிறது. ஆனால் அப்பேச்சு பேரவையின் நடவடிக்கையாகக் கருதப்படமாட்டாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தெலுங்கில் உறுப்பினர் பேசியதைப் பற்றிக் கேட்டாரே திரு. மார்ட்டின், அதாவது நடவடிக்கைப் புத்தகத்தில் ஏறுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிட்டுப் பேசியது தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருப்பவை நடவடிக்கைக் குறிப்புகளில் ஏறும். ஆனால், தெலுங்கில் நான் சொன்னது கூட நடவடிக்கைப் புத்தகத்தில் இடம் பெறாது.

DR. HABIBULLAH BAIG : Sir, on a point of information. Can we speak in Urdu also ?

MR. SPEAKER : The hon. Member can speak in Hindusthani. He can also speak in Telugu or Malayalam or Kannada or Hindi but this will not form part of the proceedings of this House. But the hon. Member can speak for his own benefit and for the benefit of any Members who know these languages.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தாய்மொழியில் எது வேண்டு மென்றாலும் பேசலாம், நடவடிக்கைப் புத்தகத்தில் வராது என்று குறிப்பிட்டீர்கள். உருது எந்த வகையில் இடம் பெறுகிறது. உறுப்பினர் கேள்வியிலிருந்து நாங்களும் விளக்கம் பெற ஆவலாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்துஸ்தானி என்பது உருதுவிலி ருந்து வேறுபட்டதா ? எனக்குத் தெரியாது.

DR. HABIBULLAH BAIG : Mr. Speaker, Sir, Urdu itself is a language recognised by the Government as one of the 14 national languages. Hindustani is different and Gandhiji himself knew it. As far as I am concerned, I am a Urdu speaking person and there are more than 8 to 10 lakhs of Urdu-speaking people.

MR. SPEAKER : The hon. Member can speak in Urdu. He can speak in Burmese, he can also speak in German or French, provided those languages are his mother-tongue. If they are not his mother-tongue, he can speak in Malayalam, Kannada or Telugu

or Hindi but the speech will not form part of the proceedings of the House. That is the position as I find it from the rules. I am sure, the Hon. Chief Minister and the ruling party will take early steps to amend the rules so that we can give more rights to the minority groups like the Telugu-speaking people. But unfortunately I have inherited the rules there has been a change of parties in the House ; those who were sitting on the left are now sitting on the right and those who were sitting on the right are now sitting on the left. But the rules have not changed. I have got to enforce the rules as I have inherited them from the previous Speakers.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பேரவையின் நடவடிக்கையில் இடம் பெறுவதற்கு இயலாத விஷயங்களை இப்பேரவையில் அனுமதிப்பது ஒழுங்கா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிப்படி நடப்பது ஒழுங்குதான்

Dr. H. V. HANDE : The hon. Member Thiru Martin has stated—வேண்டுமென்றே பேசினார் என்று சொன்னார்கள் ......

Mr. SPEAKER : I was listening to it very carefully. He did not refer to any particular Member.

Thiru. K. S. KOTHANDARAMIAH : Sir, on a point of order. The hon. Member Thiru Martin has stated that only in the Hosur taluk there are Telugu-speaking people but I wish to tell him through the Hon. Speaker........

Mr. SPEAKER : The hon. Member can tell that in his Budget speech or when he speaks on Demands for Grants but the point of order should be something concerning the procedure of the House and relating to the business of the House. Otherwise, it cönnot be a point of order. (திரு. வெங்கடசாமி எழுந்தார்.) I have got to say again that if the hon. Member tries to raise a point of order in Telugu, it cannot be done because the business of the House should be transacted either in English or in Tamil. பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதாக இருந்தால் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சொன்னால்தான் நடவடிக்கைகளில் இடம் பெறும். தெலுங்கிற்கு, அதிகமான உரிமை கொடுக்கவேண்டும் என்று விரும்பினால், அதற்கு விதியை மாற்ற வேண்டும். ஆனால், இப்பொழுது என் முன்னால் இருக்கும் விதியைத்தான் நான் கடைப்பிடிக்கவேண்டியவனாக இருக்கிறேன் ? அவ்வாறு பதவிப் பிரமாணம் எடுத்திருக்கிறேன். நான் என்ன செய்வது ? திரு. வெங்கடசாமி பேசுவார்கள்.

Thiru B. VENKATASWAMY : Sir, my hon. Friend Thiru Martin has stated that I can speak in English and Tamil and purposely I have been speaking in Telugu. I am sorry I cannot express my views well in English. This is for your information.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏன் அப்படி இறங்கிப் பேச வேண்டும் ? இங்கிலீஷ் தெரியும், தமிழும் தெரியும், இருந்தாலும் தெலுங்கில்தான் பேசுவேன் என்று நீங்கள் சொல்லலாமே.

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். நாம் இங்கே சட்டசபையிலே சிறுபான்மையோருக்கு தாராள மனப்பான்மையோடு தாய் மொழியில் பேச அனுமதி கொடுக்கிறோம். ஆனால் அதே சமயத்திலே, தமிழ்தான் தெரியும் என்று சொல்லக்கூடிய அங்கத்தினர்கள் அங்கே ஆந்திர அசெம்பளியில் இருக்கிறார்களே, அவர்களை தமிழில்

1968 மார்ச் 5] [திரு. கே. விநயகம்]

பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று நம்முடைய அரசாங்கமோ அல்லது நம்முடைய சட்டசபையோ, நம்முடைய தெலுங்கு நண்பர்கள் உதவியோடு, ஏற்பாடு செய்ய கவனம் செலுத்துவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் தானே ? (ஆரவாரம்) அதை ஆந்திரா அசெம்பளியில் எழுப்பவேண்டும்.

இப்பொழுது திரு. ம. பொ. சி. அவர்கள் பேசுவார்கள்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச எழுந்து கொள்ளும் நேரத்தில், மொழிபற்றி வாதம் எழுந்திருப்பதால், இரண்டொரு வார்த்தைகள் பேச்சோடு பேச்சாக, ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பாமல், குறிப்பிடுகிறேன். முன்பு ஒரு முறை இருந்ததாக, நான் மேல் அவையில் உறுப்பினனாக இருந்தபோது அது இருந்ததாக நான் நினைக்கிறேன். பொதுத் தேர்தல் முடிந்து, அங்கத்தினர்கள் அவைக்கு வரும்போது, ஒவ்வொரு அங்கத்தினரும் தான் எந்த மொழியில் பேசுகிறார் என்பதுபற்றி இசைவு தெரிவிக்க வேண்டும் என்று இருந்தது. இப்பொழுது அவையின் விதிகளை மொழிபற்றித் திருத்த வேண்டுமென்றால், அதற்கு ஒரு ஏற்பாடு இருக்கவேண்டும். அது தெலுங்கில் பேசிய அங்கத்தினரைப் பொறுத்தது மாத்திரமல்ல. நாம் பார்க்கிறோம், மற்றவர்களும்—நன்றாகத் தமிழ் தெரிந்தவர்கள், விரும்பும் போது ஆங்கிலத்திலும், மற்றபோது தமிழிலும் பேசுவதால்தான் இம் மாதிரியான குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவையின் மொழி தமிழ் தான் என்று முத்திரை இட்டு விடவேண்டும். அந்த வகையில் விதி வகுக்கப்பட வேண்டும். தமிழகத்திலே இருக்கும் பேரவையில் வேறு மொழி அனுமதிக்கப்பட்டால் அது என்ன தமிழ்நாட்டுப் பேரவை ? (ஆரவாரம்) அதற்கு அர்த்தம் இல்லை. ஆகவே, இந்தக் குழப்பம் தீருவதற்கு அதுதான் வழி என்று நினைக்கிறேன். ஆக, இந்த ஆலோசனையை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, விதிகளைத் திருத்தும் போது இதையும் நினைவில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப் பேரவையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள வரவு செலவுத்திட்டத்தை பல நல்ல அம்சங்களைக் கொண்டதாக நான் பார்க்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரப் பொறுப்பை ஏற்றபிறகு அதனுடைய முழு ஆற்றலோடு தயாரிக்கப்பட்ட முதல் வரவு செலவுத் திட்டமாக இதை நாம் கருதவேண்டியிருப்பதால், இதைப்பற்றி நன்கு ஆராய்வதும் அவசியப்படுகிறது. இந்த வரவு செலவுத் திட்டம், பற்றாக்குறை அல்ல. புது வரி போட்டும் கூட, பற்றாக்குறைத் திட்டம் தயாரிப்பதுண்டு. முன்னேற்றத்திற்குரிய எந்த அம்சமும் இல்லாமலும்கூட, பற்றாக்குறை பட்ஜெட் தயாரிப்பதுண்டு. ஆனால், இங்கே புது வரி போடாமலேயே உபரி பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிற நிலையைப் பார்க்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில், வரியே போடாததை ஒரு உயர்வு என்றோ, சிறப்பு என்றோ நான் கருதவில்லை. அபிவிருத்திக்குத் தேவைப் படுகிற பணங்களுக்காக வரி போடுவது அவசியந்தான். ஆனால், யாருக்கு வரி போடுவது என்ற பிரச்சினைதான் இங்கே முக்கியம். அதைச் சொல்ல வேண்டிய நிலையை முன்னிட்டுத்தான், மாநில அரசுக்கும் மத்தியஅரசுக்கும் உள்ள பொருளாதாரத் தொடர்பு இந்த வரவு செலவுத் திட்டத்தில், விமரிசிக்கப்பட்டிருக்கிறது. விமர்சனம் "கொஞ்சம் அதிகம்" என்று சொல்வதற்கில்லை. அதிகமாக இருந்தாலும், "தேவைக்கு அதிகமாக அல்லாத நிலையில்", விமரிசனம் செய்யப்பட்டிருக்கிறது. மத்திய ஆட்சியின் மீது பழி போடப்படுவதாக நான் நினைக்கவில்லை. மத்திய ஆட்சிக்குப் பரிந்து பேசுவதையே தங்களுடைய கொள்கையாக வைத்துக்கொண்டுள்ளவர்கள் வேண்டுமானால் அப்படி நினைக்கலாம். நாம் இங்கே வந்திருப்பது,